# அரசாங்க சேவை ஆணைக்குழு

# வருடாந்த அறிக்கை

# 2012

இல. 177 , நாவலை வீதி,

நாராஹேன்பிட்டி,

கொழும்பு 05.

| | | |
|---|---|---|
| தொலைபேசி | - | 0112-136600 / 0112-136650 / 0112-136700 |
| தொலை நகல் | - | 0112-369302 / 0112-369305 |
| மின்னஞ்சல் | - | secretary@psc.gov.lk |
| இணையத்தளம் | - | www.psc.gov.lk |

**எனது இல.** : PSC/ADM/06/02/05/2012
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவலை வீதி,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 05.

2013 ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி

செயலாளர் நாயகம்,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்.

ஐயா,

**<u>2012 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2012 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை</u>**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(5) உறுப்புரையின் பிரகாரம் 2012 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2012 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய இத்துடன் தங்களுக்கு பணிவுடன் அனுப்பிவைக்கின்றேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள

**ரீ.எம்.எல்.சீ. சேனாரத்ன**
**செயலாளர்,**
**அரசாங்க சேவை ஆணைக்குழு.**

## நோக்கு

சமமாக மதிக்கும் பண்பை முதன்மையாகக் கொண்டு, நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நிலைபேறாகவும் பொது மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய, ஊழல், அரசியல்மயம், வீண்விரயம், கவனக்குறைவு, ஊக்கமின்மை முதலான சகல எதிர்மறை தாக்கங்களுமற்ற, சனநாயக ஆட்சி மீது பயனுள்ள விதத்தில் செல்வாக்குச் செலுத்தும் வினைத்திறன் மிக்க, ஒழுக்கமுள்ள, திருப்திகரமான அரசாங்க சேவையொன்றை ஊக்குவித்தலும் அதற்காக ஒத்துழைத்தலும்.

## செயற்பணி

பொது மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றத் தகுதியுடைய, வினைத்திறன் மிக்க, சுதந்திரமான, பக்கச்சார்பற்ற, உயர்ந்த செயல்நோக்குடைய அரச உத்தியோகத்தர்களைக் கொண்ட அரச அலுவலர்களின் குழுவினை நிறுவிப் பேணுவதாகும்.

## அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கத்தவர்கள்

### தவிசாளர்

வித்தியாஜோதி வைத்திய கலாநிதி (திரு.) தயாசிறி பெர்ணாந்து

### அங்கத்தவர்கள்

ஜனாதிபதி சட்டத்தரணி திரு. பாலித்த எம். குமாரசிங்ஹ

திருமதி சிறிமாவோ ஏ. விஜேரத்ன

திரு. எஸ்.சீ. மான்னப்பெரும

திரு. ஆனந்த செனவிரத்ன

திரு. என்.எச். பதிரண

திரு. எஸ். தில்லைநடராஜா

திரு. எம்.டீ.டபிள்யு. ஆரியவன்ச

திரு. ஏ. மொஹமட் நஹியா

# பொருளடக்கம்


| தொடர் இல. | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 01 |
| 2 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வரலாற்று ரீதியான பயணப் பாதை | 01 |
| 3 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள் | 02 |
| | 3.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் வினவக் கூடிய சந்தர்ப்பங்கள் | 03 |
| 4 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பான பொது மீளாய்வு | 03 |
| 5 | மீளாய்வுக்குரிய வருடத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் | 05 |
| | 5.1 தாபனப் பிரிவு | 05 |
| | 5.1.1 தாபனப் பிரிவின் பணிகள் | 06 |
| | 5.1.2 தாபனப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு | 07 |
| | 5.2 நியமனம், பதவி உயர்வுப் பிரிவு | 12 |
| | 5.2.1 நியமனம், பதவி உயர்வுப் பிரிவின் பணிகள் | 13 |
| | 5.2.2 நியமனம், பதவியுயர்வுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு | 14 |
| | 5.3 ஒழுக்காற்றுப் பிரிவு | 23 |
| | 5.3.1 ஒழுக்காற்றுப் பிரிவின் பணிகள் | 24 |
| | 5.3.2 ஒழுக்காற்றுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு | 25 |
| | 5.4 மேன்முறையீட்டுப் பிரிவு | 27 |
| | 5.4.1 மேன்முறையீட்டுப் பிரிவின் பணிகள் | 27 |
| | 5.4.2 மேன்முறையீட்டுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு | 28 |
| | 5.5 நிருவாகப் பிரிவு | 29 |
| | 5.6 கணக்குப் பிரிவு | 29 |
| 6 | நிதி ஒதுக்கீடு | 30 |
| 7 | பணியாட் தொகுதி | 30 |
| | 7.1 நிறுவனக் கட்டமைப்பு (பின்னிணைப்பு 03) | 37 |
| | 7.2 பணியாட் தொகுதி | 30 |
| | 7.3 பணியாட் தொகுதிக்கான பயிற்சி நடவடிக்கைகள் | 31 |
| 8 | 2012 ஆம் வருடத்தில் அந்தந்தப் பிரிவினால் விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 31 |
| 9 | ஆணைக்குழுக் கூட்டங்கள் | 32 |
| 10 | நன்றி தெரிவிப்பு | 32 |
| 11 | பின்னிணைப்புக்கள் | 33-37 |
| | | |

## 01. அறிமுகம்

அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட 54(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. இவ் அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுவார். 2011.05.13 ஆம் திகதி தொடக்கம் இவ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அரசியலமைப்பின் 55(5) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழு, 2012 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2012 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக தயாரிக்கப்படுகின்ற இவ் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும்.

## 02. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வரலாற்று ரீதியான பயணப் பாதை

பிரித்தானியர்களின் காலணித்துவ ஆட்சிக் காலத்தில் 1946 மே மாதம் 15 ஆம் திகதிய இலங்கை (அரசியலமைப்பு) அரச பேரவைக் கட்டளையின் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இதற்கமைய அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு, சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பான நிறைவேற்று அதிகாரங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டன.

1972 ஆம் வருடத்தில் முதலாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ், அதுவரை 26 வருட காலமாக சுதந்திரமாக இயங்கி வந்த அரசாங்க சேவை ஆணைக்குழு ஒழிக்கப்பட்டு, அரசாங்க சேவை தொடர்பான அதிகாரங்கள் அமைச்சரவையிடம் கையளிக்கப்பட்டன.

1978 ஆம் வருடத்தில் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழு மீள நிறுவப்பட்டது. அவ் ஆணைக்குழு மேன்முறையீட்டு அதிகாரியாக மாத்திரம் செயற்பட்டது. 1992 ஆம் வருடத்தில், அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களின் (சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு மேலுள்ள பதவிகள் தவிர்ந்த) நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை, சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பான அதிகாரங்கள் அமைச்சரவையினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டதற்கிணங்க அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அவை நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆணைக்குழுவினால் அல்லது அதன் மூலம் தத்துவங்கள் கையளிக்கப்பட்ட குழுவொன்றினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு வழிவகுக்கும் தத்துவங்கள் அமைச்சரவையினால் தொடர்ந்தும் நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்டன.

2001 ஆம் வருடத்தில், 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக, அரச சேவை தொடர்பாக அதுவரையும் இருந்து வந்த IX அத்தியாயம் நீக்கப்பட்டு புதியதோர் அத்தியாயம் உட்சேர்க்கப்பட்டது. அதற்கிணங்க, அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கமைய ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட 09 அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களைக் கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழு காணப்பட்டதுடன், அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதி அவர்களினால் அவ் அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்பட்டார். இத் திருத்தத்தினூடாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிலை பாரிய மாற்றத்திற்கு

உட்பட்டதுடன், அதற்கமைய அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க அரசாங்க சேவை நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை என்பன தொடர்பில் அமைச்சரவைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த தத்துவங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டன. மேலும் இங்கு அரசாங்க சேவை ஆணைக்குழு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக பாராளுமன்றத்திற்கு வகை சொல்வதற்கும், பதில் கூறுவதற்கும் கட்டுப்பட்ட நிறுவனமாக மாற்றப்பட்டது.

2010 ஆம் வருடத்தில், 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தாபிதம் மற்றும் அதன் பணிகளுடனும் தொடர்புடைய விடயங்கள் திருத்தப்பட்டன. இவ் ஆணைக்குழு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு பதில் அளிக்க வேண்டிய ஆணைக்குழுவாகும். 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக திருத்தப்பட்ட 54(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. ஜனாதிபதி அவர்களினால் அவ் அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுவார். இவர்கள் மூன்று வருட காலப்பகுதிக்காக தமது பதவியை வகிப்பதுடன், தொடர்ந்தும் அவ்வாறான காலப்பகுதியொன்றிற்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறுகின்றனர்.

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக திருத்தப்பட்டவாறான 55(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பான அனைத்து கொள்கை ரீதியான விடயங்களுக்கும் அமைச்சரவையினால் ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். அரசிலமைப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப, பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு என்பன தொடர்பிலான தத்துவங்கள் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளன.

## 03. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள்

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், தரைப்படை, கடற்படை, விமானப் படை அங்கத்தவர்கள், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களினால் நியமிக்கப்பட்ட மாகாண அரச உத்தியோகத்தர்கள், ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட அமைச்சுச் செயலாளர்கள், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரசாங்கக் கம்பனிகள் ஆகிய நிறுவனங்கள் தவிர மாகாண சபைகளில் பணியாற்றும் நாடு முழுவதற்குமான சேவையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிற அனைத்து அரச உத்தியோகத்தர்களினதும்,

- நியமனம்
- பதவியுயர்வு
- இடமாற்றம்
- ஒழுக்காற்று கட்டுப்பாடு, பதவி நீக்கம் செய்தல் என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் வினவக் கூடிய சந்தர்ப்பங்கள்

கீழ்க் காணும் சந்தர்ப்பங்கள் தவிர ஆணைக்குழுவின் தீர்மானங்களை எந்தவொரு நீதிமன்றத்திலும் அல்லது நியாய சபையிலும் கேள்விக்குட்படுத்த முடியாது.

- அரசியலமைப்பின் 61அ உறுப்புரையின் பிரகாரம் 126 உறுப்புரையின் (1), (2), (3), (4), (5) ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அடிப்படை உரிமை சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடருதல்.
- அரசிலமைப்பின் 59(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்தல்.

## 04. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பில் பொதுவான மீளாய்வு

2012 சனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை இயங்கிய அரசாங்க சேவை ஆணைக்குழு இலங்கை வாழ் அனைத்து மக்களது நலன் பொருட்டும் தாய் நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டும் கௌரவம் மிக்க அரச சேவையொன்றினை ஏற்படுத்தி முன்னெடுத்துச் செல்லும் உறுதிப்பாட்டுடன் தனது செயற்பாடுகளை வெளிப்படைத்தன்மையுடனும் நேர்மையாகவும் நிறைவேற்றியது.

அதன் போது பல்வேறுபட்ட தொழிற்துறைகளுக்கும் சேவைகளுக்குமுரிய ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் சேவை பிரமாணக் குறிப்புக்களையும் மிக ஆழமாக ஆராய்ந்து அரச சேவையின் வினைத்திறனையும், செயலாற்றுகையினையும் அதிகரிக்கும் நோக்கில் திருத்தங்களைச் செய்து மேலும் தேவையான புதிய ஏற்பாடுகளையும் பிறப்பித்து அவற்றிற்கான அங்கீகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது. இவை தொடர்பாக பிரச்சினைகள் எழுந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் அமைச்சு செயலாளர்களையும் திணைக்களத் தலைவர்களையும் அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு வரவழைத்து தவிசாளர், ஆணைக்குழு உறுப்பினர்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் உள்ளிட்ட சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடாத்தி அனைவரும் கருத்தொருமைப்பட்டு துரிதமாக அப்பணிகளை நிறைவு செய்ய சந்தர்ப்பம் கிடைத்தது.

அரச சேவையின் உயர் பதவிகளுக்கான நியமனங்கள், பதவி உயர்வுகள் வழங்கும் போது கல்வி, தொழிற் தகமைகளோடு சேர்த்து அனுபவமும் கவனத்திற் கொள்ளப்பட்டது. அதன் மூலம் வெளிப்படைத்தன்மையுடனும் நீதியாகவும் பாரபட்சமின்றியும் செயற்பட முடிந்தது.

கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகளை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு வரவழைத்து கருத்தொருமைப்பாட்டுடன் கூட்டான புரிந்துணர்வு அடிப்படையில் அமைச்சினது சேவை பிரமாணக் குறிப்புக்கள், பதவி உயர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்புக்கள் உள்ளிட்ட பல விடயங்களுக்கு தீர்வுகாணப்பட்டது.

தேசிய பாடசாலைகளில் நிலவிய அதிபர் சேவையின் வெற்றிடங்களை நிரப்பும் போது கடமை காப்பு செய்துவந்த அதிபர்களினாலும் வேறு வெளி தரப்பினர்களினாலும்

செய்யப்பட்ட பல்வேறு இடையூறுகள் காரணமாக சில பாடசாலைகளில் ஏற்பட்ட பிரச்சினைகளை ஆராய்ந்து தகைமைப் பெற்ற புதிய அதிபர்களுக்கு நீதி, நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு பொலிஸ் திணைக்களத்தினதும் ஏனைய அரசாங்க நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றும் தேவையான போது ஒழுகாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து அரசாங்க சேவையின் கௌரவத்தினை பாதுகாக்க அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களினால் ஒழுக்க விழுமியங்கள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது தேவையான அனைத்துவித தகவல்களையும் மிகவும் கவனமாகவும் ஆழமாகவும் பரிசீலனை செய்ததன் பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அரசாங்க அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபோது குறித்த ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக அந்தந்த அமைச்சுக்களிலிருந்து, தினணக்களங்களிலிருந்து வேண்டடப்படுகின்ற அவதானிப்புக்கள், விதப்புரைகள் மற்றும் அறிக்கைகள் அதிகமான சந்தர்ப்பங்களில் கிடைக்கப்பெறுவதில்லை. கிடைக்கப்பெறும் அறிக்கைகளும் சில சந்தர்ப்பங்களில் குறைபாடுடையன. இதன் காரணமாக ஒவ்வொரு அலுவலர் தொடர்பாகவும் ஏற்புடைய ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பாகவும் முடிவுகளை எடுப்பதை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தாமதப்படுத்த வேண்டியுள்ளது. (உதாரணம் :- ஒழுக்காற்றுக் காரணங்களுக்காக இடமாற்றம் செய்வதற்கு அல்லது பணித்தடை செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள போதிலும் அதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்கள் எதனையும் தெளிவுபடுத்தாமையும் ஆரம்ப புலனாய்வு அறிக்கைகள் அனுப்பப்படாமையும். ஆரம்ப புலனாய்வு அறிக்கை அனுப்பப்பட்ட போதிலும் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் / அல்லது கைதுசெய்யப்பட்ட ஆவணங்கள் / பொருட்கள் சமர்ப்பிக்கப்படாமை)

ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறும் குறைபாடுடைய அறிக்கைகளில் விசேடமாக ஆரம்ப புலனாய்வு அறிக்கைகளை பரிசீலனை செய்யும் போது அரசாங்க ஒழுக்காற்று நடைமுறைகள் மற்றும் ஒழுக்காற்று செயல்முறை முகாமைத்துவம் தொடர்பான குறைந்த அறிவும் அதன் காரணமாக ஏற்படும் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன. அரசாங்க திணைக்களங்களில், அமைச்சுக்களில் ஒழுக்காற்று செயல்முறை முகாமைத்துவ விடயத்துக்கு பொறுப்பான அலுவலர்களுக்கு மாத்திரமாவது வருடாந்தம் முறையான பயிற்சியொன்றை வழங்குவதன் மூலம் அக்குறைபாடுகளை நீக்கிக்கொள்ள முடியும் என்பதுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தாமதத்தையும் தவிர்க்க முடியும். அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்களை வரவழைத்து வருடாந்தம் நடாத்தப்படுகின்ற கூட்டத்தில் இது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்ககுழுவினால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட நிலமைகளின் கீழ் அரச அலுவலர்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு செய்த மேன்முறையீடுகளை மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் வழங்கப்பட்டன.

மீளாய்வுக்குரிய வருடத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சு செயலாளர்களை, திணைக்களத் தலைவர்களை அழைத்து கலந்துரையாடல்களை நடாத்துவதனூடாக மாத்திரமன்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகள், சுற்றறிக்கைகள், இவ் அலுவலக பணிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள் என்பனவும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் அனைவரது நலன் கருதி வழிகாட்டல்களை மற்றும் படிவங்களை இலகுவாக பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவை இனணயத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறும் சிபாரிசுகளில், கடிதங்களில் மற்றும் ஆவணங்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக தீர்மானங்கள் எடுப்பதற்கு தாமதமாகின்றன. ஆகவே அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்களை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிருவகத்திற்கு அழைத்து ஆணைக்குழுவின் ஒவ்வொரு பிரிவினதும் அதிகாரிகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் செயற்படவேண்டிய நடைமுறையை விளக்குகின்ற ஒரு நாள் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

## 05. மீளாய்வுக்குரிய வருடத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அரசியலமைப்பினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களை நிறைவேற்றுவதற்கு கீழ் வரும் பிரிவுகளினால் தேவையான பங்களிப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

- தாபனப் பிரிவு
- நியமன, பதவியுயர்வுப் பிரிவு
- ஒழுக்காற்றுப் பிரிவு
- மேன்முறையீட்டுப் பிரிவு
- நிருவாகப் பிரிவு
- கணக்குப் பிரிவு

### 5.1 தாபனப் பிரிவு

குடியரசு அரசியலமைப்பின் 61ஆ உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வேறு விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்படும் வரை, அமுலாவது ஆரம்பமாகும் திகதியில் அரசாங்க சேவைக்குரியதாக செயலிலிருந்த அனைத்து விதிகள், ஒழுங்கு விதிகள், நடைமுறைகள், அவ் அத்தியாயத்தின் கீழ் அரசாங்க சேவையுடன் தொடர்புடையதாக ஆக்கப்பட்ட அல்லது ஏற்பாடுகள் செய்யப்பட்ட விதிகள், ஒழுங்கு விதிகள், நடவடிக்கை முறை என்பவற்றில் தேவையான திருத்தங்களுடன் அமுலிலுள்ளதாக கருதப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், அரசாங்க சேவையுடன் தொடர்புடைய விதிகள், ஒழுங்கு விதிகள், நடைமுறைகள் என்பவற்றுக்கான ஏற்பாடுகளை செய்யும் பணி அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தாபனப் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் தொடர்பான விபரம் வருமாறு:

மேலதிக செயலாளர் - 01
சிரேஷ்ட உதவிச் செயலாளர் - 01
உதவிச் செயலாளர் - 04
முகாமைத்துவ உதவியாளர் - 05

2008.12.15 ஆம் திகதி மேலதிக செயலாளர் பதவிக்கான நியமனம் மேற்கொள்ளப்பட்டு தாபனப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து அவ்வப்போது பணியாட் தொகுதி இணைக்கப்பட்டது.

### 5.1.1 தாபனப் பிரிவின் பணிகள்

- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குரிய அதிகாரங்கள், பொறுப்புகள், தத்துவங்கள் என்பவற்றைக் கையளிப்பதுடன் தொடர்புடைய பணிகள்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளை வகுத்தல், திருத்தங்களை மேற்கொள்ளல், பகிரங்கப்படுத்தல்.
- அரசாங்க சேவையின் நடைமுறை விதிகளை அடிப்படையாகக் கொண்ட ஆலோசனைத் தொகுதிகளைத் தயாரித்தலும், இவை தொடர்பில் தெளிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்தலும்.
- சுற்றறிக்கைகளை, ஒழுங்குவிதிகளை, அறிவுறுத்தல்களை வெளியிடல்.
- அரசாங்க சேவையுடன் தொடர்புடைய சேவைப் பிரமாணக் குறிப்புக்களை, ஆட்சேர்ப்புத் திட்டங்களை தயாரித்தலும் அவற்றில் திருத்தங்களைச் செய்தலும்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், சேவைப் பிரமாணக் குறிப்புக்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், சுற்றறிக்கைகள், கட்டளைகள் என்பனவற்றிற்கு அப்பாற்பட்ட சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்.
- நடைமுறை விதிகளில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் பொருள்கோடல்.
- அரசாங்க சேவையுடன் தொடர்புடைய நடைமுறை விதிகளுக்கு அமைய தரவு முறைமையை விருத்தி செய்தல், இற்றைப்படுத்தல், முன்னெடுத்துச் செல்லல், தகவல்களை விநியோகித்தல்.
- அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பான நடவடிக்கை முறையை வகுத்தலும் திருத்தங்களை மேற்கொள்ளலும்.

### 5.1.2 தாபனப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு - 2012 சனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை

மேற்சொன்ன காலப்பகுதியில் கீழ்க் காணும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை | 271 |
| 2. | புதிய சேவைப் பிரமாணங்கள் | 07 |
| 3. | ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தம் | 15 |
| 4. | சேவைப் பிரமாணங்கள் திருத்தம் | 06 |
| 5. | இடமாற்ற நடைமுறை | 10 |
| 6. | உயர்நீதிமன்றம், நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை, மேன்முறையீட்டு நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் | 11 |
| 7. | சுற்றறிக்கைகள் | 03 |
| 8. | விசேட சந்தர்ப்பங்களின் போது ஆட்சேர்ப்பு நடைமுறைக்கும் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கும் அப்பாற்பட்டு செயற்படுதல் தொடர்பாக செய்யப்படுகின்ற கோரிக்கைகள் | 33 |
| 09. | கொள்கைகள் தொடர்பான பணிகள் | 21 |
| 10. | அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுடன் தொடர்புடைய விடயங்கள் | 17 |
| 11. | பொதுவான விடயங்கள் | 80 |
| | **மொத்தம்** | **474** |

*அட்டவணை இல. 01*




*படம் 01*

2012.01.01- 2012.12.31 திகதி வரை அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள்

| தொ. இல | அமைச்சு | அங்கீகரிக்கப்பட்டவை |
|---|---|---|
| 1 | பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு | 15 |
| 2 | நிதி,திட்டமிடல் அமைச்சு | 2 |
| 3 | துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு | 8 |
| 4 | புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சு | 10 |
| 5 | நீர்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சு | 4 |
| 6 | சுகாதார அமைச்சு | 7 |
| 7 | பெற்றோலியத்துறை கைத்தொழில் அமைச்சு | 1 |
| 8 | கால்நடை வள, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 3 |
| 9 | நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சு | 1 |
| 10 | பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு | 1 |
| 11 | உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு | 8 |
| 12 | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 9 |
| 13 | மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு | 1 |
| 14 | நிர்மாணத்துறை,பொறியியல் சேவை,வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு | 6 |
| 15 | நீதி அமைச்சு | 3 |
| 16 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 11 |
| 17 | தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 5 |
| 18 | உயர் கல்வி அமைச்சு | 1 |
| 19 | வெளி விவகார அமைச்சு | 1 |
| 20 | அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 12 |
| 21 | பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 2 |
| 22 | தபால் சேவை அமைச்சு | 7 |
| 23 | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 16 |
| 24 | சுற்றாடல் அமைச்சு | 7 |
| 25 | சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு | 5 |
| 26 | தொழில்,தொழில் உறவுகள் அமைச்சு | 1 |
| 27 | கல்வி அமைச்சு | 2 |
| 28 | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | 4 |
| 29 | கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 11 |
| 30 | காணி,காணி அபிவிருத்தி அமைச்சு | 4 |
| 31 | சமூக சேவைகள் அமைச்சு | 11 |
| 32 | விளையாட்டுத்துறை அமைச்சு | 3 |
| 33 | கமத்தொழில் அமைச்சு | 4 |
| 34 | மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு | 4 |
| 35 | போக்குவரத்து அமைச்சு | 3 |

| | | |
|---|---|---|
| 36 | இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 6 |
| 37 | கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 16 |
| 38 | புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 6 |
| 39 | சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 0 |
| 40 | சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | 1 |
| 41 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலன்புரி அமைச்சு | 3 |
| 42 | சிவில் விமான சேவை அமைச்சு | 1 |
| 43 | தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 2 |
| 44 | கலை, கலாசார அலுவல்கள் அமைச்சு | 2 |
| 45 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 5 |
| 46 | வன சீவராசிகள் வளப் பாதுகாப்பு அமைச்சு | 11 |
| 47 | மீள்குடியேற்ற அமைச்சு | 2 |
| 48 | பொதுசன உறவுகள்,பொது அலுவல்கள் அமைச்சு | 1 |
| 49 | தனியார் போக்குவரத்து சேவை அமைச்சு | 2 |
| 50 | அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு | 4 |
| 51 | தொலை தொடர்பு, தகவல் தொழில்நுட்ப அமைச்சு | 0 |
| 52 | தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 7 |
| 53 | உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு | 2 |
| 54 | அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 2 |
| 55 | கணக்காய்வாளர் திணைக்களம் | 1 |
| 56 | சனாதிபதி செயலகம் | 4 |
| 57 | பிரதமர் அலுவலகம் | 0 |
| | **மொத்தம்** | **271** |

*அட்டவணை இல. 02*

- 2012.12.31 ஆம் திகதி வரையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்.

1. இலங்கை நிருவாக சேவை பிரமாணக் குறிப்பு
2. அலுவலக ஊழியர் சேவையின் பிரமாணக் குறிப்பு
3. இலங்கை பொறியியல் சேவை பிரமாணக் குறிப்பு
4. இலங்கை கணக்காய்வாளர் சேவை பிரமாணக் குறிப்பு
5. இலங்கை நிலஅளவை கள உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பு
6. இலங்கை அச்சுத் திணைக்களத்தின் அச்சக சேவை பிரமாணக் குறிப்பு
7. உள்நாட்டு இறைவரி சேவை பிரமாணக் குறிப்பு

- திருத்தம் செய்யப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள்

| அமைச்சு / திணைக்களம் | திருத்தம் செய்வதற்கு கிடைக்கப் பெற்ற ஆ.சே.திட்டங்கள் |
|---|---|
| இலங்கை சுங்கம் | சுங்க அதிகாரி (SL -01) |
| துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு | 1. நிறைவேற்றுத் தரம் (SL -01)<br>2. பணிப்பாளர் (பொறியியலாளர்/கப்பற்துறை) (SL -01) |
| அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு | அளவீட்டாளர் (MT -02) |
| தபால் சேவை அமைச்சு | 1. தபால் சேவை அலுவலர்(MN-03)<br>2. உப தபால் அதிபர் (MN -01) |
| பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | 1. கட்டிட பராமரிப்பு அலுவலர்(MN-03)<br>2. சட்ட அலுவலர் (SL -01)<br>3. லொறி உதவியாளர் (PL -01) |
| கடற்றொழில், நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர்/ சட்ட அலுவலர் (SL -01) |
| புனர்வாழ்வு,சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | சமூக சீர்திருத்த அலுவலர்(MN -07) |
| தேசிய மரபுரிமைகள் அமைச்சு | ஆரம்ப நிலை பகுதியளவில் தேர்ச்சிபெற்ற சேவை வகுதி (PL -02) |
| கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | நிறைவேற்றுத் தரம் (SL -01) |
| பாதுகாப்பு அமைச்சு | நிறைவேற்றுத் தரம் (SL -01) |

*அட்டவணை இல. 03*

- திருத்தம் செய்யப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்

  1. இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பு.
  2. இலங்கை கணக்காளர் சேவை பிரமாணக் குறிப்பு.
  3. இலங்கை தாதியர் சேவை பிரமாணக் குறிப்பு.

- சுற்றறிக்கைகள்

  1. (01/2012) சார்ந்த அலுவலர் சேவை வகுதியைச் சேர்ந்த அலுவலர்களுக்காக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட அலுவலர் சேவை பிரமாணக் குறிப்பு
  2. (02/2012) அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள் 1 ஆம் அத்தியாயத்தின் 178 ஆம் பிரிவை திருத்தம் செய்தல்
  3. (03/2012) அரசாங்க சேவை ஆணைக்குழு இயங்காத காலப் பகுதியில் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட மேன் முறையீடுகள்

- 2012.12.31 ஆம் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ள இடமாற்ற நடைமுறைகள் பற்றிய விபரம்

1. உள்நாட்டு இறைவரிச் சேவை
2. இலங்கை கணக்காளர் சேவை
3. இலங்கை திட்டமிடல் சேவை
4. உதவி மதுவரி ஆணையாளர், மதுவரி அத்தியட்சகர்
5. வன பாதுகாப்புத் திணைக்கள அலுவலர்கள்
6. கமநல அபிவிருத்தி அலுவலர்கள்
7. இலங்கை விவசாய சேவை
8. சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் முதலீட்டு அபிவிருத்தி பயிற்சி அலுவலர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்களின் இடமாற்ற நடைமுறைகள்
9. உதவி தொழில் ஆணையாளர்களின் உள்ளக இடமாற்ற நடைமுறை
10. கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவை அலுவலர்கள்

- எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்கள்

| தொ. இல | தொடர்புடைய விடயம் | அமைச்சு/ திணைக்களம் |
|---|---|---|
| 1 | அரச நடன/ சங்கீத குழுக்களில் 11 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள (ஒப்பந்த) கலைஞர்களுக்கு பொருத்தமான சேவைத் தரத்தினை வழங்கல் | கலை மற்றும் கலாசார அமைச்சு |
| 2 | நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் (அலுவலக ஊழியர் சேவை/ சாரதிகள் சேவை) | நீதி அமைச்சு |
| 3 | உள்ளீர்ப்புச் செய்யும் படி கோரல் | மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு |
| 4 | தாதியர் கல்விப் பணிப்பாளரினால் தாதி அலுவலர் பரீட்சையில் 40% தாதி மாணவர்களை சித்தியடையச் செய்யாமை தொடர்பான பிரச்சினை | சுகாதார அமைச்சு |
| 5 | பதவியிலிருந்து விடுவித்து இணைந்த சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோள் | இராணுவ சிவில் நிருவாக திணைக்களம் |
| 6 | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் இடமாற்றங்கள் | தொழில் திணைக்களம் |
| 7 | தொழில்நுட்ப, நிருவாக உத்தியோகத்தர் பதவிகளின் சம்பளங்கள் தொடர்பான மேன் முறையீடு | நில அளவை திணைக்களம் |
| 8 | தற்காலிக சேவை காலத்தை நிரந்த சேவைக் காலத்தோடு இணைத்தல் | சுகாதார அமைச்சு |
| 9 | முன்னைய சேவைக்கு மீள வருதல் (தொழில் நியாய சபை உரை பெயர்ப்பு பதவிக்கு மீள வருதல்) | நீதி அமைச்சு |
| 10 | அரச சேவையிலிருந்து பகுதியாகவுள்ள அரச சேவைக்கு விடுவித்தல் | கடற்கரை பாதுகாப்பு திணைக்களம் |

| | | |
|---|---|---|
| 11 | பதிவாளர் சேவை தரம் 111 இற்கு அ.நி.சு. 06/2006 பிரகாரம் MN - 05 சம்பள அளவுத்திட்டத்தை அனுமதித்தல் | பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் |
| 12 | அலுவலக ஊழியர் சேவையின் 1 ஆம் வகுப்புக்கு பதவி உயர்த்தல் | தேசிய தொல்பொருள் திணைக்களம் |
| 13 | பதவியில் நிரந்தரமாக்கல் | கல்வி அமைச்சு |
| 14 | சேவைக் காலத்தை சேர்த்தல் | நில அளவை திணைக்களம் |
| 15 | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பிரமாணக் குறிப்பு தொடர்பான பிரச்சினைகள் | அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு |
| 16 | பெருந்தோட்ட தொடர்பாடல் வசதியளிப்பு அலுவலர்களை நிரந்தரமாக்கல் | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு |
| 17 | நிறைவேற்று அலுவலர் சேவை வகுதியின் தரம் 1 இற்கு உள்ளீர்ப்புச் செய்யும் படி கோரல் | பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு |
| 18 | புகையிரத திணைக்களத்தின் ஆரம்ப தொழில்நுட்ப சேவையின் 11 ஆ தொகுதிக்கு பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் | புகையிரத திணைக்களம் |
| 19 | இலங்கை தொழில்நுட்ப சேவையின் 111 ஆம் வகுப்பின் 11 ஆம் தரத்தின் உதவி மாவட்ட மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் | நிதி, திட்டமிடல் அமைச்சு |
| 20 | முன்னைய சேவை காலத்தை தற்போதைய சேவைக் காலத்தோடு இணைத்துக் கொள்ளல் | சிறைச்சாலைகள் திணைக்களம் |
| 21 | வெளிக்கள / அலுவலக – தொகுதி 2 அலுவலர் வகுதிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2012 | இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சு |

*அட்டவணை இல. 04*

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைத் தீர்மானங்களுக்கு மேலதிகமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்களை பகிர்ந்தளித்தல், விஷேட சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவை பிரமாணக் குறிப்புக்களுக்கு புறம்பாக விடுக்கப்படுகின்ற வேண்டுகோள்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுடன் தொடர்பான விடயங்கள் மற்றும் பொதுவான விடயங்கள் தொடர்பாகவும் தாபனப் பிரிவு தனது பணிகளை மேற்கொண்டுள்ளது.

## 5.2 நியமனம், பதவியுயர்வுப் பிரிவு

2011.11.25 ஆம் திகதிய 1733/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அமைச்சரவையின் கட்டளைப் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள் கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்கள் (அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரச சேவை உத்தியோகத்தர்கள், நீதிச் சேவை உத்தியோகத்தர்கள் நீங்கலாக) தொடர்பில் காணப்படுகின்ற நியமனங்கள், பதவியுயர்வுகள் தொடர்பில் கீழ்க் காணும் பணிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமன, பதவியுயர்வு பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது. இப் பிரிவு கீழ்க் காணும் உத்தியோகத்தர்களைக் கொண்டு காணப்படுகின்றது.

| | |
|---|---|
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | - 02 |
| உதவிச் செயலாளர் | - 08 |
| நிருவாக உத்தியோகத்தர் | - 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | - 22 |

### 5.2.1 நியமனம், பதவியுயர்வுப் பிரிவின் பணிகள்

நியமன மற்றும் பதவியுயர்வுப் பிரிவின் பணிகள் கீழ் விபரிக்கப்பட்டவாறு இரு பிரதான பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

**I. நியமனங்கள்**

அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணங்கள்/ஆட்சேர்ப்புகள்/பதவியுயர்வு நடைமுறையின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையில் நிரந்தரமாக்கல், சேவை முடிவுறுத்தல், முதலில் வகித்த பதவிக்கு திரும்ப நியமித்தல், பதில்/கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் நியமித்தல், சேவையிலிருந்து விடுவித்தல் (நிரந்தர/தற்காலிக அடிப்படையில்), ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையிலிருந்து இராஜினாமாச் செய்தல், சேவைக்கு/பதவிக்கு மீள நியமித்தல், ஓய்வுபெறச் செய்தல் (30/88 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், விருப்புத் தெரிவின்/கட்டாய/மருத்துவக் காரணிகளின் அடிப்படையில்), ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் அமர்த்தல், சேவைப் பிரமாணக் குறிப்புகளில் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு (ஏற்புடைய சந்தர்ப்பங்களில்) நியமித்தல்.

**II. பதவியுயர்வு**

அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு/ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பதவியுயர்த்தல் (ஒரு தரத்திலிருந்து இன்னொரு தரத்திற்கு/ சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில்) பதவிகளுக்கு நியமித்தல் சேவை மூப்பு/ கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில்).

மேற்சொன்ன பணிகள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு/தீர்மானங்களுக்கு எதிராக நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பிலும் உயர் நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் தொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் தொடர்பிலும் செயற்படுதல்.

### 5.2.2 நியமன, பதவி உயர்வுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு - 2012 சனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை

| | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உள்ளீர்ப்புச் செய்தல் | 185 |
| 2. | பதில் கடமை நியமனம் | 563 |
| 3. | பதவிகளுக்கு நியமித்தல் | 258 |
| 4. | நிரந்தரமாக்கல் | 2374 |
| 5. | மீள நியமித்தல், ஒப்பந்த நியமனங்கள் | 302 |
| 6. | வினைத்திறன் காண் தடையிலிருந்து விடுவித்தல் / நிவாரண காலம் வழங்கல் | 699 |
| 7. | ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவியுயர்வு | 2141 |
| 8. | தேர்வு அடிப்படையிலான பதவியுயர்வு | 938 |
| 9. | விடுவித்தல் | 281 |
| 10. | சேவையிலிருந்து விலகல் | 71 |
| 11. | சாதாரண ஓய்வு பெறுகை | 812 |
| 12. | ஆட்சேர்ப்பு (மட்டுப்படுத்தப்பட்ட) | 186 |
| 13 | ஆட்சேர்ப்பு (திறந்த) | 933 |
| 14 | ஆட்சேர்ப்பு (சேவை மூப்பு, திறமை) | 108 |
| 15 | கிடைக்கப் பெற்ற மேன்முறையீடுகள் | 253 |
| | **மொத்தம்** | **10104** |

*அட்டவணை இல. 05*




***படம் 02***

**உள்ளீர்ப்பு**

| அமைச்சு / திணைக்களம் / பதவி / சேவை | எண்ணிக்கை |
|---|---|
| 1. சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 10 |
| 2. நிதி, திட்டமிடல் அமைச்சு | 127 |
| 3. பாதுகாப்பு அமைச்சு | 39 |
| 4. இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | 5 |
| 5. இலங்கை நில அளவையாளர் சேவை | 4 |
| **மொத்தம்** | **185** |

**பதில் கடமை நியமனம்**

| அமைச்சு / திணைக்களம் / பதவி / சேவை | எண்ணிக்கை |
|---|---|
| 1. மேலதிக செயலாளர் | 16 |
| 2. கல்வி அமைச்சு | 4 |
| 3. நீதி அமைச்சு | 1 |
| 4. நிர்மாணத்துறை,பொறியியற் சேவை வீ.பொ.வ.அமைச்சு | 4 |
| 5. தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 17 |
| 6. கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 2 |
| 7. கமத்தொழில் அமைச்சு | 20 |
| 8. கிராம அலுவலர் | 31 |
| 9. சனாதிபதி செயலகம் | 5 |
| 10. தொழிட்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 2 |
| 11. தபால் சேவைகள் அமைச்சு | 35 |
| 12. தகவல் தொழில்நுட்ப சேவை | 1 |
| 13. கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு | 4 |
| 14. பிரதி மன்றாடியார் அதிபதி | 4 |
| 15. சுற்றாடல் அமைச்சு | 1 |
| 16. நிதி, திட்டமிடல் அமைச்சு | 53 |
| 17. இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 1 |
| 18. பாதுகாப்பு அமைச்சு | 26 |
| 19. அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 122 |
| 20. இலங்கை விஞ்ஞான சேவை | 3 |
| 21. இலங்கை கல்வி நிருவாக சேவை | 2 |
| 22. இலங்கை பொறியியற் சேவை | 1 |
| 23. இலங்கை திட்டமிடல் சேவை | 16 |
| 24. இலங்கை கணக்காளர் சேவை | 94 |
| 25. இலங்கை நிருவாக சேவை | 71 |
| 26. இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை | 23 |
| 27. இலங்கை மருத்துவ சேவை | 1 |
| 28. சுகாதார அமைச்சு | 3 |
| **மொத்தம்** | **563** |

**பதவிகளுக்கு நியமித்தல்**

| | அமைச்சு / திணைக்களம் / பதவி / சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மேலதிக செயலாளர் | 55 |
| 2. | கல்வி அமைச்சு (தேசிய பாடசாலை அதிபர்கள்) | 30 |
| 3. | நீதி அமைச்சு | 3 |
| 4. | இலஞ்சம் அல்லது ஊழல் குற்ற விசாரணை ஆணைக்குழு | 1 |
| 5. | விளையாட்டுத்துறை அமைச்சு | 1 |
| 6. | வளிமண்டல திணைக்களம் | 4 |
| 7. | கமத்தொழில் அமைச்சு | 1 |
| 8. | சிரேஷ்ட அரச சட்டவாதி | 7 |
| 9. | சிரேஷ்ட உதவி செயலாளர் | 15 |
| 10. | பிரதி மன்றாடியார் அதிபதி | 5 |
| 11. | போக்குவரத்து அமைச்சு | 2 |
| 12. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 7 |
| 13. | பாதுகாப்பு அமைச்சு | 3 |
| 14. | இலங்கை விஞ்ஞான சேவை | 4 |
| 15. | இலங்கை மருத்துவ சேவை | 116 |
| 16. | அளவையாளர் அதிபதி | 2 |
| 17. | சுகாதார அமைச்சு | 2 |
| | **மொத்தம்** | **258** |

**நிரந்தரமாக்கள்**

| | அமைச்சு / திணைக்களம் / பதவி / சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கல்வி அமைச்சு | 14 |
| 2. | நீதி அமைச்சு | 1 |
| 3. | நிர்மாணத்துறை,பொறியியற் சேவை வீ.பொ.வ.அமைச்சு | 11 |
| 4. | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 7 |
| 5. | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 16 |
| 6. | வளி மண்டல திணைக்களம் | 1 |
| 7. | கமத்தொழில் அமைச்சு | 2 |
| 8. | சனாதிபதி செயலகம் | 13 |
| 9. | மதிப்பீட்டுத் திணைக்களம் | 22 |
| 10. | தபால் சேவைகள் அமைச்சு | 1 |
| 11. | சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 72 |
| 12. | கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு | 15 |
| 13. | கட்டமைப்பு பகுப்பாய்வாளர் | 1 |
| 14. | கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 22 |
| 15. | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 6 |

| | | |
|---|---|---|
| 16. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 9 |
| 17. | இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 11 |
| 18. | பாதுகாப்பு அமைச்சு | 111 |
| 19. | வெளி விவகார அமைச்சு | 1 |
| 20. | சுகாதார அமைச்சு | 2 |
| 21. | இலங்கை விஞ்ஞான சேவை | 6 |
| 22. | இலங்கை கல்வி நிருவாக சேவை | 119 |
| 23. | இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | 76 |
| 24. | இலங்கை பொறியியற் சேவை | 49 |
| 25. | இலங்கை திட்டமிடல் சேவை | 207 |
| 26. | இலங்கை தொழில்நுட்பக் கல்வி சேவை | 7 |
| 27. | இலங்கை கணக்காளர் சேவை | 134 |
| 28. | இலங்கை நிருவாக சேவை | 160 |
| 29. | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை | 2 |
| 30. | இலங்கை மருத்துவ சேவை | 1266 |
| 31. | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | 10 |
| | **மொத்தம்** | **2374** |

**மீள நியமித்தல் மற்றும் ஒப்பந்த நியமனங்கள்**

| | அமைச்சு / திணைக்களம் / பதவி / சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பிரதமர் அலுவலகம் | 2 |
| 2. | மேலதிக செயலாளர் | 2 |
| 3. | நீதி அமைச்சு | 29 |
| 4. | இலஞ்சம் அல்லது ஊழல் குற்ற விசாரணை ஆணைக்குழு | 1 |
| 5. | காணி,காணி அபிவிருத்தி அமைச்சு | 16 |
